# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்
# திருநெல்வேலி மாவட்டம்

## முன்னிலை: திரு.ப.பிரவீன் ஜீவா., பி.ஏ.,பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**இ.ம.எண்.3/2025**
**உள்**
**அசல் வழக்கு எண்.143/2019**

திரு.சேது சுப்பிரமணியன் ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

திரு.சேதுராமலிங்கம் என்ற ரவி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுக்களானது கடந்த 25.3.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, **மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.இராஜேந்திரன்** அவர்கள் ஆஜராகியும், **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ராஜு** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இம்மனுவில் இன்று 17.4.2026 ம் தேதி இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:–**

அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாலுகா சர்வேயர் உதவியுடன் தபசில் சொத்தை வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் அடையாளப்படுத்தினார். மேற்படி தபசில் சொத்திற்கு அருகில் உள்ள இடங்களையம் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் கண்டறிந்து பிராது தபசில் சொத்து தற்போது உட்பிரிவின்படி நத்தம் சர்வே எண்.246/286 ல் இருப்பதாக கண்டறியப்பட்டது.

அதுபோல் தபசில் சொத்திற்கு வடபக்கம் உள்ள பிரதிவாதியின் சொத்து நத்தம் சர்வே எண்.246/285 ல் இருப்பதாக கண்டறியப்பட்டது. மேற்படி வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் சர்வேயர் இடத்தை அளவீடு செய்யும்போது தான் பிராது தபசில் சொத்து 102/1 ஆக இருந்து தற்போது புல எண்.246/286 ஆக இருப்பது தெரியவந்தது. மேற்படி தபசில் சொத்திற்கு தற்போதைய புல எண்ணை குறிப்பிட்டு சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது. எனவே, மேற்படி சீர்திருத்தத்தை செய்யக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u> :-

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை. அசல் வழக்கு பிராதில் கூறியுள்ள சர்வே எண் தவறு என்றும், அதனை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பது தவறு என்றும், சர்வே எண் ஆரம்பத்தில் 102-1 ஆக இருந்தது என்றம், பின் சர்வே எண்.246-286 ஆக உள்ளது என்றும் கூறுவது சட்டப்படி ஏற்புடையதல்ல. மேற்படி சர்வே எண்.246/286 என்று மனுதாரர் கூறுவதற்கு மனுவுடன் யாதொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்படி சர்வே எண்ணை சீர்திருத்தம் செய்யக்கூடியதல்ல என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனை யாதெனில் அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்ய மனுதாரர்/வாதிக்கு அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>தீர்வு</u>

5. இருதரப்பு விவாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலினை செய்யப்பட்டது. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை. மனு, அபிடவிட் மற்றும் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளையொட்டியே மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்கள் வாதிட்டார்கள்.

**6.** இந்நீதிமன்றமானது அசல் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டபோது, அசல் வழக்கானது விளம்புகை மற்றும் மத்திய கால வருமானம் பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி ஐ.ஏ.எண்.2/2020 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் கடந்த 31.10.2025ம் தேதியில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையின் அடிப்படையில் சர்வே எண்ணை சீர்திருத்தம் செய்யக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

**7.** மேலும், எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தில் சர்வே எண் ஆரம்பத்தில் 102–1 ஆக இருந்தது என்றம், பின் சர்வே எண்.246–286 ஆக உள்ளது என்றும் கூறுவது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மேற்படி சர்வே எண்.246/286 என்று மனுதாரர் கூறுவதற்கு மனுவுடன் யாதொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

**8.** இம்மனுவில் உள்ள சங்கதிகளைப் பரிசீலித்து பார்க்கும்போது நீதிமன்ற ஆணையர் தாலுகா சர்வேயர் உதவியுடன் தபசில் சொத்தை வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் சர்வே எண்ணை சீர்திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி தாவா சொத்தின் பழைய சர்வே எண்ணுக்கு பதிலாக புதிய சர்வே எண் வருவாய்துறை ஆவணங்களின் வாயிலாக தெரிய வருவதால் மனுவில் சொல்லியுள்ள சீர்திருத்தங்களை அசல் வழக்கில் மேற்கொள்ள அனுமதிப்பதில் பிரதிவாதிக்கு யாதொரு பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும், வழக்கின் தன்மை மற்றும் வழக்குமூலம் எதுவும் மாறபோவதில்லை. எனவே, வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு மனுவில் சொல்லியுள்ள சீர்திருத்தங்களை மேற்கொள்ள மனுதாரருக்கு அனுமதி வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுதொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டடது.

PRAVEENJEEVA P

Uploaded on 17.04.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.04.17 17:19:02 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:–** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:–** இல்லை

PRAVEENJEEVA P

Uploaded on 17.04.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.04.17 17:19:11 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

மு.மா.உ.நீ.அம்பை
இ.ம.எண்.3/2025
**உள்**
அ.வ.எண்.143/2019
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:17.4.2026.